# 7 2 5 ஆண்டுக்கு முன் கால்வாய் வெட்டிய காலிங்கராயன் சிலை வெள்ளோட்டில் திறப்பு

**ஈரோடு:** பவானி ஆற்றையும், நொய்யல் ஆற்றையும் கால்வாய் மூலம் இணைத்து, 725 ஆண்டுகளுக்கு முன்பே நதி நீர் இணைப்புக்கு முன்னோடியாக விளங்கிய காலிங்கராயன் சிலை திறப்பு விழா அவர் பிறந்த வெள்ளோட்டில் நேற்று நடந்தது.

காலிங்கராயன் சிலையை தமிழக கைத்தறி துறை அமைச்சர் ராஜா திறந்து வைத்து பேசியதாவது:

கொங்கு மண்டலத்தில் பிறந்த தீரன் சின்னமலை, காலிங்கராயன் போன்றவர்களின் மறைக்கப்பட்ட உண்மைகள் தற்போது வெளிகொண்டு வரப்படுகிறது. கொங்கு மண்டலத்தில் பிறந்த ஒவ்வொருவரும் தீரன் சின்னமலை, காலிங்கராயன் வரலாறுகளை நினைக்காமல் இருக்க முடியாது. பண்டைய காலத்திலேயே வாய்க்கால் வெட்டி ஈரோடு மாவட்டம் முழுவதும் பாசனம் செழிக்கச் செய்தவர் காலிங்கராயன்.



திறக்கப்பட்ட
காலிங்கராயன் சிலை.

இக்கால்வாய் இல்லாவிட்டால் இன்று ஈரோடு மாவட்டம் செழிப்பாக இருந்திருக்காது. இதுபோல், சுதந்திரப் போராட்டத்துக்கு முன்னோடியாக திகழ்ந்தவர் தீரன் சின்னமலை. சென்னையில் தீரன் சின்னமலை நினைவாக தபால் தலை வெளியிடப்பட்டது. காலிங்கராயனுக்கும் ஈரோடு வ.உ.சி., மைதானத்தில் மிக பிரம்மாண்டமான முறையில் விழா எடுத்து தபால் தலை வெளியிட வேண்டும்.

கொங்கு மண்டலத்தில் பிறந்த ஒவ்வொருவர் வீட்டிலும் காலிங்கராயன், தீரன் சின்னமலை படங்களை வைக்க வேண்டும். அப்போதுதான் இளைய சமுதாயத்தினருக்கு அவர்களின் வரலாறு தெரியும்.

இவ்வாறு அவர் பேசினார்.

பழனி எம்.பி., கார்வேந்தன், எம்.எல்.ஏ.,க்கள் விடியல் சேகர், பழனிசாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.




ஈரோடு வெள்ளோட்டில் நடந்த காலிங்கராயன் சிலை திறப்பு விழாவில் அமைச்சர் ராஜா பேசினார். அருகில் எம்.பி., கார்வேந்தன், எம்.எல்.ஏ., பழனிச்சாமி.